# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி தாலூக்கா.

**முன்னிலை : திரு.கே.விஜயகுமார், B.Sc.,B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம்,
மொடக்குறிச்சி தாலூக்கா.

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் நாள் செவ்வாய்கிழமை

M.P. No. 13/2025
in
STC No. 26/2025

N. சின்னசாமி .. மனுதாரர்/எதிரி

/எதிர்/

P. கௌதமன் ..எதிர்மனுதாரர்/ புகார்தாரர்

இம்மனு கடந்த 22.08.2025 ம் தேதி பெறப்பட்டு இந்நீதிமன்றத்தில் M.P.No.13/2025 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.எஸ். தேவராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.கே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், விசாரணை நடைபெற்றும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இறுதியாக, இந்நீதிமன்றத்தின் முன் 04.03.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்து இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்த இந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## மனுதாரரின் மனுவின் சுருக்கம்

மேற்படி வழக்கில் மனுதாரர்/எதிரிதரப்பில் எதிர்மனுதாரர்/ புகார்தாரரை குறுக்கு விசாரணை செய்தபோது ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மூலப்பாளையம் கிளை, மத்திய கூட்டுறவு வங்கி, அரச்சலூர் கிளை மற்றும் முள்ளாம்பரப்பு கிளை கரூர் வைஸ்யா வங்கிகளில் கணக்கு உள்ளது என்றும், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் 2 ஆவணங்களான மனோகரன், சக்திவேல் ஆகியோர்களின் ஆவணங்களில் சாட்சி கையெழுத்து செய்துள்ளதாகவும், எதிர்மனுதாரர்/ புகார்தாரர் கடந்த 5 ஆண்டுகளாக வருமானவரி செலுத்தி வருவதாகவும், தனது அனைத்து வரவு செலவுகளையும் வருமானவரி

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 18:36:45 +0530

கணக்கில் காண்பித்துள்ளதாகவும், கரூர் வைஸ்யா வங்கி கிளையில் ரூ.5லட்சம் தொகை எடுத்தும், கையில் ரொக்கமாக இருந்த ரூ.2லட்சத்தையும் சேர்த்து மனுதாரர்/எதிரிக்கு கொடுத்ததாகவும், மனுதாரர்/எதிரிக்கு ஒரு வீடு தான் உள்ளது என்றும், மனுதாரர்/ எதிரி தனது பதில் அறிவிப்பில் தன்னிடமிருந்து வருமானவரி தாக்கல் நகல், வங்கிகணக்கு பட்டியல், அசையும், அசையா சொத்துக்கள் ஆவணங்கள் கேட்கப்பட்டிருந்ததில் எதிர்மனுதாரர்/புகார்தாரர் மனுதாரருக்கு அனுப்பவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே மேற்படி எதிர்மனுதாரர் /புகார்தாரர் குறிப்பிட்டுள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மூலப்பாளையம் கிளை, மாவட்ட கூட்டுறவு வங்கி அரச்சலூர் கிளை மற்றும் கரூர் வைஸ்யா வங்கி முள்ளாம்பரப்பு கிளையின் வங்கிகணக்கு பட்டியல்களை வரவழைத்து தாக்கல் செய்யவும், திண்டுக்கல் மாவட்டம் சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்யவும், 2024–2025 ஆண்டிற்கான எதிர்மனுதாரரின் வருமானவரி கணக்கை தாக்கல் செய்யவும், எதிர்மனுதாரரின் அசையும், அசையா சொத்துக்களின் பட்டியல்களை தாக்கல் செய்யவும் எதிர்மனுதாரரின் கடன் பற்றிய விபரங்களை அறிய அவருடைய வங்கிகணக்கை தாக்கல் செய்யவும் கோரிய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரரின் எதிருரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரர் / புகார்தாரர் தரப்பில் மனுதாரர்/எதிரி கோரியுள்ள வங்கிகணக்குகளில் எதிர்மனுதாரர்/புகார்தாரர் தனது தனிப்பட்ட கணக்குகளை பராமரித்து வருவதாகவும், திண்டுப்பல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் 2 ஆவணங்களான மனோகரன், சக்திவேல் ஆகியோர்களின் ஆவணங்களில் சாட்சி கையெழுத்து செய்துள்ளது இந்த வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணம் என்றும், எதிர்மனுதாரர்/ புகார்தாரர் தனது 2024–2025 வருமானவரி கணக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அதனை தாக்கல் செய்வது இயலாது என்றும், எதிர்மனுதாரரின் அசையும் அசையா சொத்துக்களின் பட்டியல்களின் விபரங்கள் வழக்கிற்கு தொடர்பில்லாத ஆவணங்கள் என்றும், எதிர்மனுதாரர்/புகார்தாரர் தனது வங்கிகணக்கில் பெறப்பட்ட கடனானது தனது தனிப்பட்ட தேவைக்காக என்றும், அது இவ்வழக்கிற்கு அர்த்தமில்லாதது என்றும், மேலும் இவ்வழக்கு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 18:36:51 +0530

## உத்தரவு

மேற்படி இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்யும்பொழுது மேற்படி மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் புகார்தாரரின் மாவட்ட மத்திய கூட்டுறவு அரச்சலூர் வங்கி கிளை கணக்கு விபரங்களையும், மூலப்பாளையம் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கி, முள்ளாம்பரப்பு கரூர் வைஸ்யா வங்கி கணக்கு விபரங்களை ஒப்படைக்குமாறும், மேலும் புகார்தாரர் சாட்சியாக கையெழுத்து செய்துள்ள ஒட்டன்சத்திரம் சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தையும் 2024–2025 ஆண்டிற்கான வருமானவரி கணக்கு தாக்கல் விபரங்களையும், புகார்தாரருக்குள்ள அசையா சொத்து விபரங்களையும் புகார்தாரர் பெற்றுள்ள கடன்களின் விபரங்களை தாக்கல் செய்யுமாறு கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

மேற்படி மனுதாரர்/எதிரி பதில் வழக்கறிஞர் அறிவிப்பிலேயே புகார்தாரரின் வருமானவரி தாக்கல் நகல், மேலும் வங்கி கணக்கு பட்டியல், அசையும், அசையா சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விபரம் கேட்கப்பட்டு அது எதிரிக்கு புகார்தாரரால் அளிக்கப்படவில்லை என குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகை ரூ.7லட்சம் தொகையில் கரூர் வைஸ்யா வங்கியில் ரூ.5லட்சம் எடுத்து கொடுத்தாக குறிப்பிட்டுள்ள நிலையில் வரவு செலவு சம்பந்தமாக தொகை விபரத்தை வருமானவரி கணக்கில் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி புகார்தாரர் கொடுத்ததாக சொல்லப்படும் பணம் வருமானவரி கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்பதை தெரிந்து கொள்ள மனுதாரர்/எதிரி ஏற்கனவே கோரியவாறு மூலப்பாளையம் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கிகணக்கு வரவு செலவு பட்டியலையும், மத்திய கூட்டுறவு வங்கி அரச்சலூர் கிளையின் வரவு செலவு பட்டியலையும், முள்ளாம்பரப்பு கரூர் வைஸ்யா வங்கி வரவு செலவு கணக்கு பட்டியலையும் இந்த வழக்கில் தாக்கல் செய்வது அவசியம் என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் எதிர்மனுதாரர்/ புகார்தாரர் தரப்பில் எந்த தேதி முதல் வரவு செலவு கணக்கு பட்டியல் தேவை என மனுவில் குறிப்பிடவில்லை என்றும், அதில் தனிப்பட்ட விபரம் என்று குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மேற்படி மனுதாரர்/எதிரிக்கு எதிர்மனுதாரர்/புகார்தாரர் காசோலை தொகை கொடுத்ததாக சொல்லும் தேதியிலிருந்து மேற்படி புகார்தாரர் கணக்கு வைத்துள்ள மூலப்பாளையம் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கிகணக்கு வரவு செலவு பட்டியலையும், மத்திய கூட்டுறவு வங்கி அரச்சலூர் கிளையின் வரவு செலவு பட்டியலையும், முள்ளாம்பரப்பு கரூர் வைஸ்யா வங்கி வரவு செலவு கணக்கு பட்டியலையும் 2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான வங்கி வரவு செலவு கணக்கு பட்டியல் விபரத்தையும், 2024 –2025 ஆண்டிற்கான வருமானவரி கணக்கு தாக்கல் அறிக்கை நகலையும், இந்த வழக்கில் தாக்கல்

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 18:36:56 +0530

செய்யவேண்டும் என எதிர்மனுதாரருக்கு உத்தரவிட்டு மேற்படி மனுவானது பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. மற்ற ஆவணங்களை தாக்கல் செய்யுமாறு கோரியுள்ளதை பொருத்து மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கின் தீர்வுக்கு அவசியமானது இல்லை என இந்நீதிமன்றம் கருதி மனுவை பகுதியாக அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு பகுதியாக அனுமதித்து உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரி செய்யப்பட்டு இன்று, 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.03.10 18:37:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்துார் கிராமம், மொடக்குறிச்சி தாலுாக்கா.